சுருக்கம்

கலையும் பண்பாடும் – தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் – வாரியத்தில் பதிவுபெற்ற உறுப்பினர்களுக்கு பிற அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் வழங்கப்படுவது போன்று அனைத்து நலத்திட்ட உதவிகளையும் மீண்டும் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண் 2) துறை

அரசாணை (நிலை) எண். 132

நாள்: 17–09–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், ஆவணி 31

படிக்கப்பட்டது

1. அரசாணை நிலை எண்.171, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள்.26.07.2012
2. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய உறுப்பினர்– செயலாளர் / கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அவர்களின் கடித ந.க. எண் 117/த.நா.க.ந.வா/2014, நாள் 26.10.2017

*****

ஆணை:

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் மூலமாக வாரிய உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு மூக்கு கண்ணாடி நிதியுதவி, கல்வி நிதியுதவி, திருமண நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, கருக்கலைப்பு/கருச்சிதைவு நிதியுதவி, இயற்கை மரணம் / ஈமச்சடங்கிற்கு உதவித்தொகை போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வந்தன.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், நாட்டுப்புறக் கலைஞர் நலவாரிய நிருவாகச் செலவுக்கான மொத்த மானியம் (Block Grant) ஆண்டொன்றுக்கு ரூ.10.00 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டு நிருவாகச் செலவில் பற்றாக்குறை ஏற்படும்போது தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் பற்றாக்குறை மானியம் (deficit grant) வழங்கப்படும் எனவும், நலத்திட்ட உதவிகளை வழங்கிட தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.25.00 இலட்சம் மானியமாக நிர்ணயித்தும் மேற்கொள்ளப்படும் செலவிற்கேற்ப மானியத்தை காலாண்டு அடிப்படையில் விடுவித்திடவும் அரசு ஆணையிட்டது.

3. தற்போது தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் கீழ்க்காணும் நலத்திட்ட உதவிகள் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன:-

| நிதியுதவி விவரம் | வழங்கப்படும் தொகை |
|---|---|
| மூக்குக்கண்ணாடி | ரூ. 500/– |
| திருமண நிதியுதவி | ரூ. 5,000/– |
| இயற்கை மரணம் / ஈமச்சடங்கு | ரூ. 10,000/– |

4. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை அளித்திட மற்றும் வாரியம் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறிட அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியங்களில் வழங்கப்படுவதைப் போன்று தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்திலும் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த நலத்திட்ட உதவிகளை மீண்டும் வழங்கிட உரிய அரசாணையினை வழங்குமாறு தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய உறுப்பினர்–செயலாளர் / கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. நீதிப்பேராணை மனு எண் 19171 / 2015–ன் மீது சென்னை உயர்நிதிமன்ற மதுரைக்கிளையால் 08.09.2017 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையில், தமிழக பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகளை மேம்படுத்திடவும், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள நாட்டுப்புறக் கலைஞர்களை பாதுகாத்திடவும் கலை பண்பாட்டுத் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், இந்நடவடிக்கைகள் ஒருமுறை நடவடிக்கையாக இல்லாமல் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டுமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

6. வம்சாவழியாக தொடர்ந்து மண்ணின் கலைகளை பரப்பி வரும் பிறவிக் கலைஞர்களான கிராமிய / நாட்டுப்புறக் கலைஞர்கள் தங்களது வறுமையின் காரணமாக பாரம்பரியமிக்க கிராமிய / நாட்டுப்புறக் கலைகளை வருங்கால சந்ததியினருக்கு கற்றுக் கொடுக்க முடியாமல் போவதற்கான வாய்ப்புகளை முற்றிலும் அகற்றி தமிழ் பண்பாட்டினையும் கலாசாரத்தினையும் மீட்டெடுக்க கிராமிய / நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டியது அவசியமானதாக உள்ளது. நாகரீக வளர்ச்சியாலும், தொலைக்காட்சி உள்ளிட்ட நவீன மின்னணு சாதனங்கள், இணையதளம், சமூக வலைதளம் ஆகியவற்றின் வரவாலும் அழிவின் விளிம்பிற்கு தள்ளப்பட்டுள்ள தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளை மீட்டெடுப்பது மற்றும் அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடுவது மிகவும் அவசியமான ஒன்றாக உள்ளது.

7. கலை பண்பாட்டுத் துறை ஆணையர் / தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய உறுப்பினர்–செயலாளரின் கருத்துருவினை ஆய்வு செய்து, அதனை ஏற்று, பிற அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அனைத்து

நலத்திட்ட உதவிகளையும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவுபெற்ற நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும் கீழ்க்கண்டவாறு வழங்கிட அரசு ஆணையிடுகிறது. :-

| வ. எண் | நலத்திட்ட உதவி | தற்போது வழங்கப்பட வேண்டிய நலத்திட்ட உதவிகள் ரூ. |
|---|---|---|
| 1 | கல்வி ஊக்கத் தொகை ஆண்டொன்றுக்கு: (இரு வாரிசுகளுக்கு) | |
| | 10 ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு | 1,000 |
| | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | 1,000 |
| | 11 ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு | 1,000 |
| | 12 ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு | 1,500 |
| | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | 1,500 |
| | முறையான பட்டப்படிப்பு | 1,500 |
| | விடுதியில் தங்கி பட்டப் படிப்பு | 1,750 |
| | முறையான முதுகலை பட்டப் படிப்பு | 4,000 |
| | விடுதியில் தங்கி முதுகலை பட்டப் படிப்பு | 5,000 |
| | தொழில்நுட்ப பட்டப்படிப்பு<br>(சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம்) | 4,000 |
| | விடுதியில் தங்கி பயிலும் தொழிநுட்ப படிப்புகள் | 6,000 |
| | முதுகலைத் தொழிற் படிப்புகள் | 6,000 |
| | விடுதியில் தங்கி முதுகலைத் தொழிற் படிப்புகள் | 8,000 |
| | தொழில்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்), தொழிற் பயிலகப் படிப்பு (ஐ.டி.ஐ) | 1,000 |
| | விடுதியில் தங்கிப் படித்தல் | 1,200 |
| 2 | திருமண நிதியுதவி<br>உறுப்பினர் / மகன் / மகள் (இரு முறை மட்டும்) | 5,000 |
| 3 | மகப்பேறு, கருக்கலைப்பு / கருச்சிதைவு நிதியுதவி (பெண் உறுப்பினர்களுக்கு இருமுறை மட்டும்) | |
| | அ. மகப்பேறு நிதியுதவி | 6,000 |
| | ஆ. கருச்சிதைவு / கருக்கலைப்பு நிதியுதவி | 3,000 |
| 4 | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கான உதவித் தொகை<br>(*மூன்று வருடத்திற்கு ஒருமுறை) | *1,500 |
| 5 | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | 20,000 |

| | | |
|---|---|---|
| 6 | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 5,000 |
| 7 | விபத்து மரண உதவித் தொகை | 1,00,000/- |

8. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு திருமணம், கல்வி, மகப்பேறு, மூக்குக்கண்ணாடி, இயற்கை மரணம் / ஈமச்சடங்கு மற்றும் விபத்து மரணம் உள்ளிட்ட மேலே பத்தி 7-ல் ஆணையிடப்பட்டுள்ள நலத்திட்டங்களுக்கு நிதியுதவியினை தொடர்ந்து வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை, வாரியத்திற்கான நலத்திட்டங்களுக்கான நல்கையில் கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்திட ஏதுவாக உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய உறுப்பினர்-செயலாளர் / கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 42816/நிதி(கல்வி-II)த்துறை/2019, நாள் 10.09.2019-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை-8.
உறுப்பினர்-செயலாளர், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், சென்னை-8.
செயலாளர், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், சென்னை-8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA) / (E&RSA) / (A&E), சென்னை-18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை-9.

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை- 9.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
தலைமைச் செயலாளர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், நிதித்துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9.
நிதி (கல்வி-II/ வ.செ.பொ.I/வ.செ.பொ.II)த் துறை, சென்னை- 9.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்,
திருச்சிராப்பள்ளி / தஞ்சாவூர் / மதுரை / திருநெல்வேலி / கோயம்புத்தூர் / சேலம் / காஞ்சிபுரம்
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)
இருப்புக்கோப்பு / நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/09/19

**பிரிவு அலுவலர்**